# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 26.02.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் அதிகாரம் அந்நிஸா -வின் 7வது வசனத்தை ஓதினார்கள்:**

அதன் பொருள் : அநாதைகள் திருமணத்(தின் வய)தை அடையும் வரை, அவர்(களின் அறிவுத்திறமை) களைச் சோதியுங்கள். பின்னர் நீங்கள் அவர்களிடத்தில் அறிவுடைமை(யின் அறிகுறி) யினைக் கண்டால், அவர்களின் பொருள்களை அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள். அவர்கள் பெரியவராவதை அஞ்சி, அவசர அவசரமாகவும் அளவு கடந்தும் அவற்றை விழுங்காதீர்கள். செல்வராக இருப்பவர் (அப்பொருளை உபயோகிப்பதை விட்டும்), விலகிக் கொள்ள வேண்டும். ஆனால் ஏழையாக இருப்பவர், பொருத்தமான முறையில் (அப்பொருளிலிருந்து) உண்ணட்டும். பின்னர் நீங்கள் அவர்களிடம் அவர்களின் பொருள்களை திருப்பிக் கொடுக்கும் போது, அவர்களின் முன்னிலையில் சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ் கணக்கெடுப்பதில் போதுமானவனாவான். (4:7)

சென்ற குத்பாவில் ஓர் இறைக்கட்டளையைப்பற்றி கவனமூட்டினேன். உள்ளத்தில் இறையச்சம் கொண்டவாறு ஒருவர் அக்கட்டளையை நிறைவேற்றினால் அதுவே சமூகத்தின் அமைதிக்கு உத்திரவாதாகமாகி விடுகிறது. ஏனெனில் இக்கட்டளையின் கடைசியில் (அல்லாஹ்), **ஹஸீப்** – கணக்கெடுப்பவன் ஆக, தான் இருப்பதாக கூறுகிறான். இது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஓர் எச்சரிக்கையாகும். ஒருவர் மற்றவரின் மீது ஸலாம் சொல்ல வேண்டும் என்ற முக்கியமான கட்டளையின்படி அமல் செய்யாவிட்டால் இறைவனுக்கு முன்னால் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

எவ்வாறிருப்பினும் சமூகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக மட்டுமின்றி ஒருவருக்கொருவர் வெறுப்பை அழிப்பதற்கும் இது முக்கியமானதொரு கட்டளையை இதன் தொடர்ச்சியாக எடுத்துரைக்கிறேன். இக்கட்டளை சூரா அந்நிஸாவின் 7 –வது வசனத்தில் உள்ளது. அதனை நான் இப்போது ஓதினேன். அந்த வசனத்தின் கடைசியிலும் கூட அல்லாஹ் தான் ஹஸீபாக இருப்பதாக எச்சரிக்கை செய்துள்ளான்.

இக்கட்டளையை நிறைவேற்றவில்லையெனில் இறைவனுக்கு முன்னால் பதில் தர வேண்டியிருக்கும்.

அனாதைகளுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று இந்த வசனங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இறைவன் கூறுகிறான்: அனாதைகளின் அறிவுத் திறனை சோதித்து வாருங்கள். அதாவது உங்களது பொறுப்பில் இருக்கிற அனாதைகளின் கல்வி மற்றும் தர்பிய்யத் குறித்து கவனம் செலுத்துங்கள். இவ்விஷயத்தில் அலட்சியமாக இருந்து விடாதீர்கள். நல்ல கல்வியும் பயிற்சியும் அவர்களுக்கு கிடைக்கச் செய்யுங்கள். எவ்வாறு உங்கள் குழந்தைகளை அவ்வப்போது கவனித்து ஆய்வு செய்து வருவீர்களோ அதே போன்று அந்த அனாதைகளையும் கவனித்து ஆய்வு செய்து வாருங்கள். கல்வி மற்றும் மார்க்க விஷயங்களில் முன்னேறுகிறார்களா இல்லையா என்று கவனித்து வர வேண்டும். பிறகு எந்த துறையில் அவர்களுக்கு ஆர்வமுள்ளதோ அதில் அவர்களுக்கு நல்ல பயிற்சி அளியுங்கள். உங்கள் குழந்தைகள் படிப்பில் சற்று மந்தமாக இருந்தால் பயிற்சி வகுப்பு போன்றவை மூலம் அவர்களை தேற்றுகிறீர்கள். அதேபோன்று அனாதைகள் உங்கள் பொறுப்பில் இருக்கும் பட்சத்தில் செய்ய வேண்டும். சற்று பக்குவம் அடைந்து விட்டால் விட்டுவிடலாம் என்பதன்று. எல்லா வகையிலும் கவனித்து பயிற்சி அளிக்க முயற்சி செய்ய வேண்டும். அவர்களின் தகுதி, ஆர்வத்திற்கு ஏற்ப வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும். அவர்கள் முன்னேறி தமது சொந்தக் காலில் நிற்க வைக்க வேண்டும்.

நான் அனாதையாக இருப்பதால் எனது தகுதியை சரியாக பயன்படுத்தி முன்னேறுவதிலிருந்து தடுக்கப்பட்டு விட்டேன் என்று அவர்களுக்கு ஒருபோதும் எண்ணம் ஏற்பட விட்டுவிடக் கூடாது. எனது பெற்றோர் உயிரோடு இருந்தால் முன்னேறுபவர்களின் அணியில் நானும் நின்றிருப்பேன் என்று அவர்கள் எண்ணிவிடக் கூடாது.

தனிப்பட்ட ஒருவர் ஓர் அனாதையை பராமரிக்கலாம் அல்லது ஒரு ஜமாஅத் அனாதைகளைப் பொறுப்பேற்று பராமரிக்கலாம். யார் தரப்பிலிருந்து செய்யப்பட்டாலும் அவர்களின் கல்வி, மற்றும் மார்க்கப் பயிற்சிக்கான எல்லா பொறுப்பும் அவர்களைப் பராமரிப்பவர்களைச் சாரும். திருமண வயதை அவர்கள் அடையும் வரை இவ்விதம் பராமரிக்க வேண்டும். பிறகு அவர் வயது வந்த பிறகு நல்லதை கெட்டதை பிரித்தறியும் பக்குவம் பெற்று விடுவார். சிறு வயதில் மிகச் சிறந்த தர்பிய்யத் அவர்களுக்கு கிடைத்திருந்தால் வளர்ந்த பிறகு சமுதாயத்தின் சிறந்த அங்கமாக அவர் ஆக முடியும். ஆனால் கூர்ந்து கவனியுங்கள். இதில் இன்னொரு விஷயத்தின் பக்கமும் கவனமூட்டப்பட்டுள்ளது.

ஒருவர் வாலிபர் ஆவது மட்டும் எல்லாவற்றிற்கும் தகுதியுடையவராக ஆக்கி விடாது. அவரது பெற்றோர் ஏதேனும் சொத்துகளை விட்டுச் சென்றிருந்தால் அதனை நல்ல முறையில் இவரால் பராமரிக்க இயல வேண்டும். அவர் அறிவுள்ளவராக வேண்டும் என்பதும் இங்குள்ள நிபந்தனையாகும்.

சொத்துகளை சரியாக பராமரிக்கும் திறனை வளர்ப்பதும் பொறுப்பாளரின் கடமையாகும். எனவே அவர்களின் அறிவுத்திறனை சோதித்து வருமாறும் இறைவன் கட்டளையிட்டுள்ளான். ஒரு குழந்தை வாலிப வயதை அடைந்து அவரது செயல்பாடுகள் நல்ல முறையில் இருப்பதைக் கண்டால் அவரது செல்வத்தை அவரிடம் ஒப்படைத்து விட வேண்டும். ஏனெனில் அவர் அச்சொத்தின் உரிமையாளராவார். அவரது பங்கை அவரிடம் ஒப்படைத்து விட வேண்டும். பொறுப்பாளரே அதனை பராமரித்து அச்செல்வத்தை வளர்க்க என்ன செய்ய வேண்டுமோ செய்ய வேண்டும். அவர் வாலிப வயதை அடைந்தும் கூட தனது செல்வத்தை தானே பராமரிக்கும் அளவுக்கு மூளை வளம் இல்லாமல் தனது செல்வத்தை பாதுாக்க முடியாத நிலையில் இருப்பார் எனில் அவரது செல்வத்தை நீங்களே பராமரியுங்கள். அவர்களின் தேவைக்கேற்ப வழங்குங்கள். சிலருக்கு சற்று தாமதமாகவே பக்குவமும் அறிவுத்திறனும் கிடைக்கிறது. எனவே இடைப்பட்ட அக்காலக்கட்டத்தில் பொருளாதார சம்பந்தமாக விஷயங்களை புரிய வைத்துக் கொண்டிருங்கள். அதனால் ஒரு காலம் இல்லா விட்டாலும் இன்னொரு காலத்தில் அவர் தமது செல்வத்தை தானே பராமரிக்கும் ஆற்றல் பெற்று விடலாம்.

சிலர் சில செயல்பாடுகளில் பலவீனமானவராக இருக்கலாம். எல்லாவற்றையும் நல்ல முறையில் தாமே பராமரிக்க முடிவதில்லை. அவ்வாறிருந்தும் கூட பணத்தை உண்டாக்குவதிலும் பயன்படுத்துவதிலும் திறமைவாய்ந்தவராக இருப்பார். சிலர் முற்றிலும் அறிவில்லாதவராக இருந்தும், காசு விஷயத்தில் பெரும் திறமைசாலியாக மாறி விடுகின்றனர். பிறகு பொறுப்பாளர்கள் இந்த இடைப்பட்ட காலத்தில் அனாதைகளின் பெற்றோரின் செல்வத்தை விரயம் செய்யக் கூடாது. அனாதைகளின் பெற்றோரின் செல்வத்தை பொறுப்பாளர் எந்த விதமான கணக்கும் வைக்காமல் செலவழித்துக் கொண்டே செல்லக் கூடாது. அல்லது அனாதைகளின் பெயரைச் சொல்லி ஏதாவது சாக்குப்போக்குகள் சொல்லி தான் பயனடைந்து கொண்டு இருக்கவும் கூடாது. எவ்வளவு சீக்கிரம் இந்த அனாதையின் சொத்தை சாப்பிட முடியுமோ சாப்பிட்டு விட வேண்டும். அவர்கள் வளர்ந்து விட்டால் சொத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டி வரும் என்ற எண்ணத்தில் முயற்சி செய்பவர் அநீதியிழைப்பவர் ஆவார். பல விவகாரங்கள் அவ்வாறும் நடக்கின்றன. பெரியவராவதற்குள் மக்கள் அனாதைகளின் செல்வத்தை விழுங்கி விடுகின்றனர். பிறகு அனாதைகள் நீதிமன்றத்திற்கு போய் தமது உரிமையைப் பெற வேண்டியது வருகிறது.

எனவே பொறுப்பாளரின் நிய்யத் தவறாக இருந்தால் அல்லாஹ்விடம் கணக்கு கொடுக்க வேண்டியிருக்கும்.

பிறகு அல்லாஹ் அநியாயக்காரர்களின் அநீதியை தடுப்பதற்காக இவ்விஷயத்தில் நிறைய கட்டுப்பாடுகளை விதித்தும் இருக்கிறான்.

ஒருவர் செல்வந்தராக இருக்கிறார். அனாதையை பராமரிக்கும் செலவுகளை தாமே ஏற்றுக் கொள்ளும் சக்தி உடையவர், அனாதைகளின் உணவு, உடை, கல்வி, மார்க்கப் பயிற்சிக்காக நல்ல ஏற்பாடு ஆகியவற்றை செய்து தர முடியும் என்றால் அத்தகைய பொறுப்பாளர் அனாதையின் செல்வத்திலிருந்து சிறிது கூட செலவுக்கு எடுக்கக் கூடாது. மாறாக தனது கையிலிருந்து செலவழிக்க வேண்டும். **யஸ்தஃபில்** என்பதன் பொருள் இதுதான். நாமும் சிறிது செலவுக்காக அவர்களின் செல்வத்திலிருந்து எடுப்போம் என்ற எண்ணம் வரவே கூடாது. மிகவும் முயன்று இந்த அநீதியிலிருந்து ஒருவர் தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஷய்த்தானிய எண்ணத்தை வெளியில் வீசிவிட வேண்டும். அல்லாஹ்வுடைய கட்டளைக்கு குறுக்கே வருகிற எல்லா எண்ணங்களும் ஷயத்தானிய எண்ணங்களேயாகும்.

எனவே செல்வந்தர், அனாதையை தமது பையிலிருந்து காசு செலவழித்து பராமரிக்க வேண்டும். அனாதையின் பெற்றோர் எவ்வளவு அதிகமாக செல்வத்தை விட்டுச் சென்றிருந்தாலும் சரியே. ஏழையாக இருந்தால் தமது சொந்த செலவுடன் ஓர் அனாதைக்காகவும் அதிகப்படியாக செலவு செய்ய முடியாதபட்சத்தில் அத்தகைய பொறுப்பாளர் அனாதையின் பெற்றோர் விட்டுச் சென்றதிலிருந்து செலவுக்கு எடுக்கலாம். ஆனால் மிகவும் கவனத்துடன் செலவு செய்ய வேண்டும். அவசியமானதாக இருக்க வேண்டும். எடுத்த பணத்திற்கு கணக்கும் வைத்துக் கொள்ள வேண்டும். அனாதைக்கு செலவழித்துக் கொண்டே கூடவே உங்கள் வீட்டு செலவுகளையும் அதிலேயே பார்த்துக் கொள்ளக் கூடாது. நான் இந்த அனாதையை எனது வீட்டில் வைத்து பராமரிக்கிறேன். எனவே எனது செலவுகளுக்காகவும் எடுப்பதற்கு எனக்கு உரிமை உண்டு. அனாதைக்கு தங்குமிடம், செலவழித்த மின்சாரம், தண்ணீர் இவற்றிற்காக சிறிது எடுத்துக் கொள்வோம் என்று சில கருமிகள் நினைக்கின்றனர். எவ்வளவு முடியுமோ முடிந்த வரை அதிலிருந்து எடுக்க நினைக்கின்றனர்.

அனாதைகளை பராமரிப்பது சம்பந்தமாக ஒரு ஹதீஸ் இவ்வாறு வருகிறது.

அமர் பின் ஷுஐப் (ரலி) தனது பாட்டனாரிடமிருந்து அறிவிக்கின்றார். ஒரு மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், என்னிடம் செல்வம் இல்லை. ஆனால் நான் ஒரு அனாதையைப் பராமரிப்பாளனாக இருக்கிறேன் என்று கூறினார்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

உனது பொறுப்பிலுள்ள அனாதையின் செல்வத்திலிருந்து தேவையான அளவுக்கு மட்டும் உண்ணும். எந்த வீண் செலவும் கூடாது. அனாதையின் செல்வத்தைக் கொண்டு உனது சொந்த செலவை கவனிக்க வேண்டாம். அல்லது அனாதையின் செல்வத்திலிருந்து செலவு செய்து உனது செல்வத்தை மிச்சப்படுத்தாதீர். அதாவது உங்களது வியாபாரத்தில் அவர்களது செல்வத்தையும் போட்டு அதில் வருகிற லாபத்தை நீங்கள் எடுத்துக் கொண்டு விட வேண்டாம். உங்கள் பணம் மிச்சமாகும் வகையில் அவர்களின் லாபப் பணத்திலிருந்து அவர்களுக்காகவும் உங்களுக்காகவும் செலவு செய்தல் ஆகியவையும் கூடாது என்று கூறினார்கள்.

**பிறகு இன்னொரு கட்டளை இவ்வாறு உள்ளது:**

உங்களிடம் செல்வம் இருப்பதால் அனாதையின் செல்வத்திலிருந்து செலவு செய்யவில்லை என்றாலும் அல்லது உங்களிடம் செல்வம் இல்லாததால் அதிலிருந்து செலவு செய்திருந்தாலும் ஆகிய இரண்டு சூழ்நிலையிலும் சரியான முறையில் கணக்கு வைத்து அந்த அனாதைகள் வளர்ந்ததும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். மாறாக, அனாதைகளின் செல்வத்தை வியாபாரத்தில் போட்டு வளர்த்து அதிகமாக்கி அவர்களிடம் ஒப்படைப்பது மிகவும் சிறந்த செயலாகும். கணக்கு ஒப்படைத்தவாறு இது உமது பெற்றோர் மூலம் வந்த அசல் செல்வம். இது அதன் லாபம், இரண்டையும் சேர்த்து இப்போது ஒப்படைக்கிறேன் என்று கூறி திரும்பி ஒப்படைத்து விட வேண்டும்.

அதேபோன்று ஒரு ஏழை அனாதைகளை பராமரிப்பதற்காக அவரது சொத்திலிருந்து என்ன செலவு செய்தாரோ அனைத்தையும் அவர் பக்குவம் அடைந்ததும் கணக்குப் பார்த்து ஒப்படைக்க வேண்டும். கணக்கு ஒப்படைக்கும் வேளையில் சாட்சியும் வைத்துக் கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் தப்பெண்ணம் உருவாகக் கூடாது. அனாதைகளின் உள்ளத்தில் பிறகு எந்த சங்கடமும் வரக்கூடாது. சில நேரங்களில் பருவம் வந்த அனாதைகளின் உள்ளத்தில் பொறுப்பாளர் மீது ஊசலாட்டங்கள் ஏற்படலாம். சிலர் அனாதைகளின் மீது அனுதாபம் காட்டுபவர் போன்று நடித்து பொறுப்பாளர் பற்றி சில தப்பெண்ணங்களை போடவும் சாத்தியமுண்டு. எனவே மனித இயல்பை கருத்தில் கொண்டுதான் இறைவன் கூறினான். எப்போது நீங்கள் அனாதைகளின் செல்வத்தை திரும்ப ஒப்படைத்தாலும் முழு கணக்கையும் ஒப்படைத்து விடுங்கள். அதற்கு சாட்சியையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினான். ஏனெனில் பொறுப்பாளரும் தப்பெண்ணத்தில் இருந்து தப்பிப்பதற்கு இது அவசியமானதாகும். அதே போன்று அனாதையும், பொறுப்பாளரின் மீது தப்பெண்ணம் கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளலாம்.

எனவே அனாதைகளின் உரிமையைப் பற்றி திருக்குர்ஆன் கூறியது போன்று விளக்கமாக வேறு எங்கும் கூறப்படவில்லை.

**இந்த ஒரே வசனத்தில் கிட்டத்தட்ட 7 அடிப்படை விசியங்கள் கூறப்பட்டுள்ளன.**

1. அனாதைகளின் அறிவுத் திறனை சோதித்து வாருங்கள். அவர்களின் கல்வி, மார்க்கப் பயிற்சியின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அவர்கள் முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்கிறார்களா? இல்லையா? என்று பாருங்கள்.
2. அவர்களின் கல்வி, மார்க்கப் பயிற்சிக்காக முயற்சியை வாலிப வயதை அவர்கள் அடையும் வரை செய்ய வேண்டும். நடுத்தெருவில் அவர்களை விட்டுவிடக் கூடாது.
3. அவர்கள் தமது செல்வத்தை தாமே பராமரிக்கும் தகுதியை அடைந்து விட்டால் அவர்களின் செல்வத்தை அவர்களிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.
4. அனாதைகளின் செல்வத்தை அவர்களுக்காக மட்டுமே செலவழிக்க வேண்டும். நீங்கள் பயனடையக் கூடாது.
5. பணக்காரர் ஒரு அனாதையைப் பராமரிக்கிறார் எனில் அனாதையில் செல்வத்திலிருந்து பராமரிப்புச் செலவுக்காக பணம் எடுப்பது அவர்களுக்கு முற்றிலும் ஆகுமானதல்ல.
6. ஏழை வசதியில்லாதவர் ஓர் அனாதைக்கு பொறுப்பாளராகும் போது அனாதையின் பொருளிலிருந்து பொருத்தமான முறையில் செலவு செய்வதற்கு அனுமதி உண்டு.
7. பொருளைத் திருப்பி ஒப்படைக்கும் போது சாட்சி வைத்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் உங்களுடைய நிய்யத்தில் களங்கம் ஏற்படாமல் இருக்கும். உங்கள் மீது பின்னாளில் பழி ஏற்படாமலும் இருக்கும்.

அல்லது உங்களைப் பற்றி அனாதையின் உள்ளத்தில் தப்பெண்ணம் ஏற்பட்டாலும் இருக்கும். இறுதியில் கூறுகிறான்: அல்லாஹ் உங்களை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு மறைவானது எதுவும் இல்லை. உங்கள் நிய்யத் என்ன என்றும் அவனுக்கு தெரியும். எனவே நீங்கள் கணக்கு எதுவும் வைக்கவில்லை எனில் ஒருநாள் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்.

திருக்குர்ஆனில் பல இடங்களில் அனாதைகளை பராமரிக்குமாறும், அவர்களுடன் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்றும் கட்டளை உள்ளது. அவர்களின் பெருளைப் பாதுகாத்துத் தருமாறு கவனமூட்டப்பட்டுள்ளது.

**திருக்குர்ஆனில் சூரா பனீ இஸ்ராயீலில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**(அனாதைக்கு) நன்(மை பயக்கும்) முறையிலன்றி அனாதையின் பொருளை அணுகாதீர்கள். அதுவும் அவர் தமது வாலிப வயதை அடையும் வரையேயாகும். மேலும் (உங்கள்) உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நிச்சயமாக ஒவ்வொரு உடன்படிக்கையைக் குறித்தும் விசாரிக்கப்படும். (17:35)**

இந்த வசனத்தில் கூறப்பட்ட கட்டளையின் விளக்கம் முன்னரே வந்து விட்டது. வெளிப்படையாகப் பார்க்கும் முன்னர் கூறப்பட்டதை விட ஒரே ஒரு விஷயம் இதில் அதிகப்படியாக உள்ளது. அது **இன்னல் அஹ்த கான மஸ்வூலா** – நிச்சயமாக உடன்படிக்கைகள் குறித்து விசாரிக்கப்படும்.

இங்கு உடன்படிக்கை குறித்து விசாரிக்கப்படும்? எந்த கட்டளை குறித்து விசாரிக்கப்படும்?

இங்கு உடன்படிக்கை என்பது பொறுப்பாகும். அனாதைகளை பராமரித்தல் அவர்களின் பொருளை நிர்வகித்தல் ஆகியவை தனிநபர் மற்றும் சமூகம் இரண்டின் மீதும் கடமையாகும். சமூகப் பொறுப்புகளை கவனத்தில் கொள்ளுங்கள். அனாதைகளின் செல்வத்தைப் பாதுகாக்கவும் செய்யுங்கள். அவர் தம் செல்வத்தை அவர்களே நிர்வகிக்கும் ஆற்றல் பெறும் வரை அதை நிர்வகித்து வருவது பொறுப்பாளரின் கடமையாகும். அஹ்மதியாக இருக்கும் பட்சத்தில் அவரை பராமரிக்கும் பொறுப்பு ஜமாஅத்திற்கும் உண்டு. இது அந்த அனாதை மீது காட்டப்படும் கருணையல்ல. நான் உனது பொருளை செல்வத்தை கண்காணித்து வந்தேன். அப்படி நான் செய்யா விட்டால் உமது நிலை கஷ்டமாகி விடும் என்று அனாதைகளிடம் சொல்லிக் காட்டக் கூடாது. ஏனெனில் அவ்வாறு செய்வது கடமையாகும். அனாதைகளின் இவ்வுரிமையை வழங்குவது கடமையான ஒன்றாகும்.

இரண்டாவது விஷயம் இந்த பொறுப்பை உங்கள் மீது இறைவன்தான் சுமத்தியுள்ளான். எனவே ஒரு மூஃமின் என்ற முறையில் உங்களிடம் இறைவன் ஒரு உடன்படிக்கை வாங்கியுள்ளான். அதனை நிறைவேற்றாவிட்டால் அனாதைகளின் பொருளிலிருந்து தவறான பயன் பெறுவீர்கள் எனில் அல்லாஹ் அது குறித்து உங்களிடம் கேட்பான்.

இன்னொரு வார்த்தையில் சொல்லப்போனால் இதே கருத்தையே அல்லாஹ் முதலில் குறிப்பிட்ட வசனத்திலும் கூறியுள்ளான்.

**வ கஃபா பில்லாஹி ஹஸீபா** – கணக்கெடுப்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன்.

இவ்விஷயத்தை இறைவன் இன்னும் தெளிவாக விளக்கி ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளான். அதுவும் சூரா நிஸாவின் இரண்டாவது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

**அனாதைகளுக்கு அவர்களின் பொருள்களைக் கொடுத்து விடுங்கள். தூய்மையானதற்கு ஈடாக, தூய்மையற்றதை மாற்றாதீர்கள். மேலும் அவர்களின் பொருள்களை உங்கள் பொருள்களுடன் (சேர்த்து) விழுங்கி விடாதீர்கள். நிச்சயமாக இது பெருங்குற்றமாகும். (4:3)**

இங்கும் அதே கருத்துதான் திரும்பக் கூறப்படுகிறது. நீங்கள் அனாதைகளின் பொருள்களை உங்கள் பொருளுடன் சேர்த்து சுயநலன் பெறுவதற்காக முயற்சி செய்யாதீர்கள். உங்கள் சுத்தமான பொருள் கூட இந்த கெட்ட நிய்யத்தின் காரணத்தால் தீய பொருளாகி விடும். ஹராமான பொருளை இவ்வாறு சம்பாதிப்பது பெரும் பாவமாகும். உங்களது இந்த பாவத்துக்கு தண்டனை கிடைக்கும். அல்லாஹ் சூரா நிஸாவில் இவ்வாறு கூறுகிறான்:

**அனாதைகளின் பொருள்களை அநியாயமாக விழுங்குவோர்,நிச்சயமாக தங்கள் வயிறுகளில் நெருப்பைத் தான் நிரப்பிக் கொள்கின்றனர். நிச்சயமாக, அவர்கள் சுடர் விட்டெரியும் நெருப்பில் நுழைவர். (4 : 11)**

அனாதைகளின் பொருள்களை விழுங்குவது நெருப்பை விழுங்குவதற்கு சமமாகும். இந்த நெருப்பு அவர்களை இவ்வுலகிலும் எரிக்கும். மரணத்திற்கு பிறகும் எரிக்கும். இவ்வாறு திருக்குர்ஆன் மிகவும் அழுத்தமாக,சமூகத்தின் பலவீனமான பகுதியாகிய அனாதைகளை பாதுகாக்கிறது. அவர்களின் உரிமைகளை பாதுகாக்கிறது. அதன் மூலம் சமூகத்தின் அமைதி நிலை நிற்கிறது. அனுமதியற்ற வழிகளில் ஒருவர் மற்றவரின் பொருளை விழுங்கினால் அதன் பிறகு கூட அவருக்கு அமைதி கிடைக்கப்போவதில்லை. நிம்மதியிழந்து காணப்படுகிறார். அநியாயமான முறையில் பிறர் பொருளை சாப்பிட்டவர் அமைதியாக இருப்பதை ஒருபோதும் காண முடியாது.

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதே உண்மையான நேக்கமாகும். அதற்காக ஒரு மூஃமின் முயற்சி செய்கிறார்; செய்யவும் வேண்டும்.

பிறகு பொருள் வசதி படைத்த அனாதைகளுக்கு மட்டும் இந்த பாதுகாப்பல்ல. ஓர் அனாதை, அவர் கையில் பணம் உள்ளது. எனவே அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்பதன்று. சிந்தித்துப்பார்த்தால் இதில் ஒரு பொதுவான கட்டளையும் உள்ளது.

பயிற்சி அளித்தல், பராமரித்தல் உங்கள் பொறுப்பாகும். அந்த அனாதை ஓர் ஏழையாக இருப்பினும் அவரை பாதுகாப்பது உங்கள் மீது கடமையாகும்.

ஒருவர் சொத்து உடையராக இருந்தாலும் பொறுப்பாளருக்கு ஒரு கடமை உள்ளது. சரியான கல்வி மற்றும் மார்க்கப் பயிற்சியை பொறுப்பாளர் அந்த அனாதைக்கு தரவேண்டும். அத்துடன் அவருடைய பொருள்களையும் பாதுகாக்க வேண்டும். அனாதையின் பொருள்களின் மீது பேராசை கொண்டு அனாதைகளை பராமரிக்கக் கூடாது. மாறாக அனாதையின் நிலை கண்டு அவரை பராமரிக்க முன்வர வேண்டும்.

**அல்லாஹ் சூரா நிஸாவின் 10- வது வசனத்தில் கூறுகிறான்:**

**தங்களுக்குப் பின்னால் வலுவிழந்த குழந்தைகளைத் தாம் விட்டுச் சென்றால், அவர்களுக்கு என்ன நேருமோ என்று அஞ்சுவோர் ( மற்ற அநாதைகளைப் பற்றியும் ) அல்லாஹ்விற்குப் பயந்து செயலாற்ற வேண்டும். அவர்கள் நேர்மையான பேச்சைப் பேச வேண்டும். (4 :10)**

அநாதைகளின் உரிமையை வழங்குவதற்காக இது ஒரு அதிகப்படியான எச்சரிக்கையாகும். எவருக்கும் அவரது மரண வேளை தெரியாது. எனவே அனாதைகளை பராமரிக்கின்ற அதேவேளையில், இது போன்று நமது குழந்தைகளும் கூட அனாதையாகி விடலாம் என்ற எண்ணம் இருக்க வேண்டும். எனவே இந்த எண்ணம் வரும்போது நமது உள்ளத்தில் பெரும் துயரம் ஏற்படும். எனவே, நமது நிலைமை குறித்து கவலைப்படுகின்ற அதே வேளையில் அடுத்தவர்களின் நிலைமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இதுவே இறைக்கட்டளையாகும். ஆகவே குழந்தைகளின் தர்பிய்யத்துக்காக முழு முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக உங்கள் பொறுப்பில் உள்ள குழந்தைகளை அவர்கள் சமூகத்தின் மிகச் சிறந்த பகுதியாக மாறவேண்டும். சில நேரங்களில் இதற்கு மாற்றமாகவும் நடக்கிறது. அளவுக்கதிகமான பாசம் காட்டி குழந்தையின் தாத்தா, பாட்டிமார்கள் சரியான தர்பிய்யத்திலிருந்து விலக்கி விடுகின்றார்கள். இது தவறு. குழந்தைகளுக்கு சரியான பயிற்சி கொடுத்து சமூகத்தின் மிகச் சிறந்த அம்சமாக்குவதே அசல் நோக்கமாகும். எனவே அனாதைகள் சில நேரங்களில் சரியான அறிவு, விவரம் இல்லாமல் தமது சுய திறமையையும் கூட வீணாக்கி விடுகின்றனர். அவர்களை மிகச் சிறந்த குடி மகனாக மாற்றத்தக்க தர்பிய்யத் வழங்க வேண்டும். அளவுக்கதிகமான கடுமையும் நல்லதல்ல. அளவுக்கதிகமான பாசமும் நல்லதல்ல. மாறாக தூய எண்ணத்துடன் உங்கள் குழந்தைகளைப் போன்று பயிற்சி கொடுக்க வேண்டும்.

பெற்றோரின் கையின்கீழ் இருக்கிற சொந்தக் குழந்தைகளைப் போன்றே ஒரு அனாதைக்கும் உரிமை உண்டு. அனாதைகளின் உரிமைகள் அவர்களின் தர்பிய்யத் சம்பந்தமாக அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகிறான்:

**இம்மை மறுமை பற்றியும் (சிந்தித்துச் செயல்பட வேண்டும்) அவர்கள் உம்மிடம், அனாதைகளைக் குறித்தும் வினவுகின்றனர். நீர் கூறுவீராக. அவர்களின் நலத்தை மேம்படுத்துவது பெரும் நற்செயலாகும். நீங்கள் அவர்களுடன் இணைந்து வாழ்வீர்களாயின், (அதில் எந்தக் குற்றமுமில்லை. ஏனென்றால்) அவர்கள் உங்கள் சகோதரர்களேயாவர். நன்மை செய்வோரிலிருந்து குழப்பம் செய்பவனை அல்லாஹ் நன்கறிகின்றான். அல்லாஹ் நாடியிருந்தால், உங்களைத் துயரத்திற்காளாக்கியிருப்பான். நிச்சயமாக அல்லாஹ் வல்லவனும் நுண்ணறிவுடையோனுமாவான். (2 : 221)**

இங்கு பொருள் வசதிபடைத்த அனாதைகளை மட்டும் பராமரிக்க வேண்டும் என்று கூறப்படவில்லை. மாறாக எல்லா வகையான பலவீனமான, ஏழையான ஆதரவற்ற எல்லா அனாதைகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அனாதைகளை சீர்திருத்துதல், சிறந்த முறையில் பராமரித்தல், நல்ல கல்வி வழங்குதல் ஆகியவை மிக உயரிய பணிகளாகும்.

ஒரு ஹதீஸ் அறிவிப்பில் வருகிறது.ஹஸ்ரத் அபூ அமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அனாதை சிறுவர் சிறுமியரின் தலையில் அல்லாஹ்வுக்காக மட்டுமே ஒருவர் அன்புடன் கை வைப்பார் எனில், அவரது கைபட்ட ஒவ்வொரு முடிக்கும் ஒரு நன்மையை இறைவன் வழங்குவான். தனது பொறுப்பிலுள்ள அனாதை குழந்தைகளுடன் ஒருவர் கருணையுடன் நடந்து கொண்டால் அத்தகைய மனிதரும் நானும் சொர்க்கத்தில் இவ்வாறு இருப்போம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இரு விரல்களையும் சேர்த்துக் காண்பித்தார்கள். இதுவே அனாதைகளை பராமரிப்பவரின் அந்தஸ்தாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மனிதருக்கு சொர்க்கத்தின் நற்செய்தியைக் கூறியுள்ளார்கள். அனாதை சிறுவரின் தலையை அன்புடன் வருடியவர் – அவர்களது தேவைகளை கருத்தில் கொண்டவருக்கு சிறுவர் சிறுமியரின் தலையில் உள்ள முடி அளவுக்கு நன்மையை இறைவன் தருகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் அனாதைகளைப் பராமரிப்பதற்காக ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு சண்டையிட்டனர். ஓர் அனாதை கிடைத்து விட்டால் இவரை நான் பராமரிக்கிறேன்; நான் பராமரிக்கிறேன் என்று முன் வந்தனர். ஜன்னத்திலும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் அவர்களின் பாதத்தில் இடம் கிடைக்க வேண்டும் என்ற பேரவா சஹாபாக்களுக்கு இருந்தது. அனாதைகளை பராமரித்து மிக அழகிய முறையில் பயிற்சியும் வழங்கினர். தமது சொந்த குழந்தைகளைப் போன்று அவர்களின் தர்பிய்யத்தில் கவனம் செலுத்தினார்கள்.

பிறகு அனாதைகளுடன் இணைந்து வாழ்வீர்களாயின், அவர்கள் உங்கள் சகோதரர்களேயாவர். அனாதைகளை பராமரிப்பவர் அண்ணன் ஆகிறார். அவர் தனது தம்பிக்கு வழங்க வேண்டிய உரிமையை வழங்க வேண்டும். உண்மையாக ஓர் அண்ணன் தம்பிக்கு உரிமையை வழங்குவது போன்று வழங்க வேண்டும் ஏனெனில் சில அண்ணன்கள் தம்பிக்கு அநீதியிழைத்து விடுகின்றனர். எனவே இறைவன், பெரிய சகோதரர்கள் சிறிய சகோதரருக்கு உரிமையை வழங்குவது போன்று வழங்குங்கள் என்று கூறினான். அவர்கள் ஏழைகள் எனில் கல்வி மற்றும் தர்பிய்யத் கொடுத்த பிறகு தமது சொந்தக்காலில் நிற்பதற்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கு பொருளாதாரரீதியாக ஏதாவது உதவி செய்ய முடியும் என்றால் செய்யுங்கள். தொழில் தொடங்க அல்லது வேறு ஏதாவது உதவி அவருக்கு தேவைப்படும் எனில் ஒரு அண்ணன் தனது தம்பிக்கு செய்வது போன்று உதவி செய்யுங்கள். அதுவும் சுயநலம் இல்லாமல் இந்த சேவையை செய்யுங்கள். பிறகு அல்லாஹ் தான் எல்லாவற்றையும் சூழ்ந்திருப்பதைப் பற்றி குறிப்பிடுகின்றான். குழப்பம் செய்பவர்கள், சீர்திருத்துபவர்கள் யார் என்பதை அல்லாஹ் நன்கறிகின்றான் என்றும் கூறுகின்றான். எனவே அனாதைகளை சமூகத்தின் மிகச் சிறந்த அங்கமாக மாற்றுங்கள். ஓர் ஏழை அவரால் அனாதையை சரியாக பராமரிக்க முடியவில்லை எனில் அவர் அந்த அனாதையின் பொருளிலிருந்து சிறிது செலவு செய்யுங்கள் என்று கூறியுள்ளான். இதுவும் இறைவனது கருணையாகும். இப்போது இன்னொரு கேள்வி

எழுகிறது. அனாதையிடமும் பொருள் வசதி இல்லை என்றால் என்ன செய்வது? நல்ல எண்ணம் இருந்தும் உங்களால் அதனை செய்ய முடியவில்லை எனில் அல்லாஹ் அதனை நன்கறிகின்றான். அவன் உங்களுக்கு அனுமதி அளித்தவாறு உங்களை கஷ்டத்தில் ஒப்படைக்க வேண்டாம் என்று கூறி ஜமாஅத் அமைப்பிடம் ஒப்படைக்குமாறு கூறிவிட்டான். அவர்களின் கல்வி மற்றும் தர்பிய்யத்திற்கு இவ்வாறான ஓர் ஏற்பாட்டை செய்யுங்கள். நோக்கம் அனாதைகளின் கல்வி மற்றும் தர்பிய்யத் தான். உங்களை கஷ்டத்தில் போடுவது நமது நோக்கமல்ல. எனவே ஜமாஅத்தின் உதவி தேவை என்றால் ஜமாஅத்தின் கவனத்திற்கு அதனை கொண்டு வந்து விடுங்கள். பிறகு அனாதைகளின் கண்ணியம் மரியாதை குறித்து குறிப்பிட்டவாறு இறைவன் கூறுகின்றான்.

**கல்லா பல்லா துக்ரிமூனல் யத்[த்]தீம் –** அவ்வாறன்று; மாறாக, (தவறு உங்களுடையதுதான்) **நீங்கள் அனாதைகளைக் கண்ணியப்படுத்தவில்லை (89:18)** என்றும் இன்னும் சில கடமைகளை தவறவிட்டதையும் கூறி இறை தண்டனை பற்றி எச்சரிக்கை விடுகின்றான்.

இன்னொரு இடத்தில் கூறுகின்றான்:

**ஃபஸாலிகல்லஸீ யதுவ்வுல் ய[த்]தீம் –** அவனே அனாதையை விரட்டுகின்றவன். **(107:3)**

இந்த வசனத்தில் மார்க்கமற்றவர்கள் சிலரைக் குறிப்பிட்டு அவர்களின் பெரும் அடையாளம் என்னவெனில் அவர்கள் அனாதைகளை விரட்டுவார்கள் என்று குறிப்பிடுகின்றான். இது தவிர சில அடையாளங்களும் உள்ளன.

ஆகவே அனாதைகளை பராமரிக்காமல் விட்டு விடுவது எத்தகைய தீமை எனில் சமுதாயத்தின் வீழ்ச்சி மற்றும் அழிவுக்கு அதுவே ஓர் அறிகுறியாகும்.

எனவே உயர்ந்த சமூகத்தை உருவாக்குவதற்கு இந்த தீமையை அகற்ற முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் அனாதைகளின் உரிமைகளை வழங்காததன் மூலம் தியாகத்தின் அடிப்படை ஜமாஅத்திலிருந்து அகன்று விடுகிறது. அனாதைகளின் முன்னேற்றமும் அதனால் தடைபடுகிறது. இதனை சரிசெய்யாவிட்டால் ஏழை – பணக்காரன் இடைவெளி மிகவும் அதிகமாகி விடும். பிறகு அமைதி மிகுந்த சமூகம் உருவாவதற்குப் பதில் குழப்பம் மிகுந்த சமூகம் உருவாகிறது.

ஏனெனில் மனிதனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை சரிவர செய்வதை இறைவன் விரும்புவது மட்டுமின்றி அதனை மூஃமின்களுக்கு கடமையாக்கி இருக்கின்றான். அல்லாஹ்வின் திருப்தியை விரும்புபவர்களைக் குறித்து அவர்கள் எவ்வாறு அனாதைகளை பராமரிக்கிறார்கள் என்று இறைவன் இவ்வாறு கூறுகிறான்.

**யுத்இமூனத் தஆம அலா ஹுப்பிஹி மஸ்கீனவ் வய[த்]தீமவ் வஅஸீரா – அவர்கள் அ(ந்த இறை)வன் மீது கொண்ட அன்பின் காரணமாக ஏழை, அனாதை, கைதி ஆகியவர்களுக்கு உணவளிக்கின்றனர். (76:9)**

அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முயற்சி செய்கின்றனர். சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கு உணவுக்கான ஏற்பாடு செய்து கொடுக்கின்றனர். உணவுக்கான ஏற்பாடு என்றால் என்ன? அவர்களின் பராமரிப்பு, தர்பிய்யத்திற்கான ஏற்பாடு மற்றும் கல்விக்கான ஏற்பாடு போன்றவை ஆகும். இதுபோன்ற வசதிகளை தம்மிடம் போதிய செல்வம் இல்லாத நிலையிலும் கூட செய்து வருகின்றனர். இவ்வாறு அவர்கள் தியாகம் செய்தவாறு அனாதைகளின் உரிமையை வழங்குகின்றனர்.

அவர்கள் மனமுவந்து இதைச் செய்கின்றனர் என்று கூறியதிலிருந்து தம்மிடம் எஞ்சியதை அவர்கள் தருபவர்கள் அல்ல; மாறாக, அவர்கள் தேவையானதை தமக்கு தருகின்றனர் என்பது உறுதியாகிறது. இதுவே அசல் தியாகம் ஆகும். தமக்கு பிரியமானதை வழங்க வேண்டும். அதன் மூலம் சமூகத்தில் அடிமட்ட

பகுதியினர் நலிவுற்றோர் சமநிலைக்கு வர முடியும். இதன் மூலம் அவர்கள் முன்னேறுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. இத்தகைய ஓர் அழகிய சமூகத்தை உருவாக்குவதற்காகத்தான் இறைவன் நமக்கு அறிவுரை பகர்கின்றான்; வழிகாட்டுகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இவ்விஷயத்தில் மிகவும் அழுத்தம் கொடுத்தார்கள். ஒரு ஹதீஸை நான் முதலிலேயே கூறிவிட்டேன். இன்னும் சில ஹதீஸ்களை எடுத்து வைக்கிறேன். அனாதைகளைப் பராமரிப்பவர்களின் அந்தஸ்தை குறித்து அதில் வருகிறது.

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.**

ஒரு மனிதர் மூன்று அனாதைகளை பராமரித்தால் இரவு முழுவதும் தொழுது பகல் முழுவதும் நோன்பு பிடித்தவாறும் காலையும் மாலையும் இறைவழியில் வாளை தூக்கியவாறு கழித்தவரை போன்றவரின் நிலையை அவர் பெறுகிறார். இரு விரல்களைப் போன்று அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நெருங்கி இருப்பார்.

பிறகு மாலிக் பின் ஹாரிஸ் தனது குடும்பத்தைச் சார்ந்த ஒருவரிடமிருந்து அறிவிக்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக்கேட்டேன்.

முஸ்லிம் பெற்றோரின் அனாதைக் குழந்தைக்கு தனது உண்ணல் குடித்தலில் தொடர்ந்து சேர்த்துக் கொள்கிறார். அந்த அனாதை பிறரிடம் எந்த தேவைக்காகவும் செல்லாத அளவுக்கு அவரை கவனித்துக் கொள்கிறார். அந்த மனிதருக்கு ஜன்னத் உறுதி செய்யப்பட்டு விட்டது.

தான் உண்பது போன்ற உணவையும் தண்ணீரையும் பிறருக்கு வழங்குவதும் அந்த அனாதை, தானே முன்னேற்றத்தின் வழியைச் சென்றடையும் வரை அவரை கவனித்து வருவதும் உண்மையான பராமரிப்பாகும். அதாவது அவரை சமூகத்தின் மிகச் சிறந்த பகுதியாக மாற்ற வேண்டும். அத்தகைய மனிதருக்கு அல்லாஹ் ஜன்னத்தின் நற்செய்தி தருகிறான்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. அல்லாஹ் மன்னிக்க முடியாத ஷிர்க் போன்ற பாவங்களைத் தவிர்த்து பிற எல்லா பாவங்களையும் அனாதைகளைப் பராமரிப்பவருக்காக மன்னித்து அதிகமான நற்கூலிகளை வழங்குகிறான். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் அனாதைகளின் மீது கவனம் செலுத்தப்படுகிறது. ஆப்பிரிக்கா போன்ற சில பகுதிகளில் அஹ்மதியான அனாதை சிறுவர்கள் மட்டுமின்றி கிறித்தவ அனாதைக் குழந்தைகளுக்காகவும் கூட ஜமாஅத் தேவையானவற்றை செய்து வருகிறது.

ஆனால் இப்போது பாகிஸ்தானின் அனாதைகள் பராமரிப்பு கமிட்டியின் பணிகளை நினைவு கூற விரும்புகிறேன். அல்லாஹ்வின் அருளால் பாகிஸ்தானில் அனாதைகளின் பராமரிப்புக் குழு செயல்படுகிறது. இதனை 1999-ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் 100 அனாதைகளை பராமரிக்கும் திட்டத்தை உருவாக்கினார்கள். பிறகு இப்பணி மிகவும் விரிவடைந்தது. முதலில் 100 அனாதைகள் ஹாஸ்டலில் தங்க வைக்கப்பட்டனர். பிறகு அந்த அனாதைகளின் செலவை ஜமாஅத் ஏற்கட்டும். நாங்கள் அவர்களை எங்களுடன் வைத்துக் கொள்கிறோம் என்று கூறினார்கள். பிறகு நூறிலிருந்து பராமரிப்பின் கீழ் இருந்து வந்த அனாதைகளின் எண்ணிக்கை இன்னும் அதிகரித்தது. இப்பணி இன்னும் பரந்து விரிந்தது. அனாதைகளை பராமரிப்பது தொடர்பான இறை கட்டளை மட்டும் ஹதீஸ்களை கேட்டோம். அதிலிருந்து அதனை நாம் மதிப்பிடலாம்.

நாம் ஏற்கனவே கூறியது போன்று இப்பணி மிகவும் விரிந்தது. பாகிஸ்தானில் 500 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 700 அனாதைகள் இந்த அனாதை பராமரிப்புக் குழுவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். மாதாமாதம் இவர்களுக்காக 25-30 லட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்படுகின்றது. அதுவும்

மிகவும் கவனத்துடன் செலவு செய்யப்படுகிறது. வீணடிக்கப்படவில்லை. அவர்களின் உணவு, குடித்தல் செலவுகள் அவர்களின் கல்வி, மருத்துவ செலவுகள், சிறுமிகள் வாலிப வயதை அடைந்ததும் திருமணம் செய்து வைக்கும் செலவுகள் ஆகியவை ஏற்படுகின்றன. சில அனாதைகளுக்கு இடங்கள் உள்ளன. அதனை பராமரிக்க அவர்களிடம் பணமில்லை. அதுவும் தரப்படுகிறது. ஆக இது ஒரு பெரும் செலவாகும்.

இதற்கு மிகவும் கடுமையான தேவை தற்போது உணரப்பட்டுள்ளது. அனாதை பராமரிப்புக்குழு செயலர் துஆவுக்கு எழுதியவாறு நிலைமையை எழுதியுள்ளார். வெளிப்படையாக அவர் ஒருபோதும் பொருள் தேவை குறித்து கேட்டதில்லை. எனவே நான் இன்று அமெரிக்கா, கனடா, ஐரோப்பாவில் வாழும் பாகிஸ்தானியர்களிடம் வலியுறுத்த விரும்புகிறேன். இந்த அனாதைகளின் பராமரிப்பில் பங்கு கொள்ளுங்கள். இதனை விட நற்பேறு வேறு என்ன இருக்க முடியும்? இதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் இடம் கிடைக்கிறது.

ஐரோப்பா, பிரிட்டன், அமெரிக்கா, கனடா நாடுகளின் அஹ்மதிகள் வீட்டு செலவிலிருந்து தலைக்கு 7லிருந்து 10 பவுண்ட் வருடத்திற்கு தந்தாலும் கூட மாதாமாதம் இந்த வகைக்காக செலவு செய்யலாம். பாகிஸ்தானின் இந்த அனாதைகளைப் பராமரிக்க முடியும். இங்கு வாழும் மக்களுக்கு 10 பவுண்டு வருடத்திற்கு கொடுப்பது என்பது சாதாரண தொகை தான். ஆனால் பல அனாதைகளின் ஒளிமிக்க எதிர்காலத்திற்கு இந்த 10 பவுண்டு கணிசமான பணி செய்ய போதுமானது. வாய்ப்புள்ளவர்கள் அதிகமாகவும் தரலாம். பல்வேறு பிரிவுகளின் கீழ் அங்கு அனாதைகளுக்கு உதவி செய்யப்படுகிறது. சிறு வயதில் இருந்து வாலிபர்கள் வரை பல்வேறு பிரிவுகளுக்கு மாதாமாதம் செலவு செய்யப்படுகிறது. தவிர, பல செலவுகள் ஒரு லட்சத்திலிருந்து 3 லட்சம் வரை ஆகிறது. மேலும் பாகிஸ்தானின் செல்வந்தர்கள் வசதி படைத்தவர்களுக்கு கூறிக் கொள்கிறேன். அனாதைகளுக்காக தேவைப்படும் இந்த நிதியில் உங்கள் பங்கை செலுத்துங்கள். அல்லாஹ்வின் கட்டளை என்னவெனில் தமக்கே தேவையுள்ள நிலையிலும் கூட செலவு செய்ய வேண்டும் என்பதாகும். இதனையும் எப்போதும் கவனத்தில் கொள்ளுங்கள். பாகிஸ்தான் அஹ்மதிகளைத் தவிர மற்ற அஹ்மதிகள் இதில் பங்கெடுப்பதை நான் தடுக்கவில்லை. அவர்களும் பங்கெடுக்கலாம். மற்றவர்களின் பணமும் வந்தால் காதியானிலும் ஆப்பிரிக்காவிலும் செலவு செய்யலாம். பாகிஸ்தானியர்களிடம் பாகிஸ்தானிய அனாதைகளுக்காக குறிப்பாக வலியுறுத்துகிறேன். அல்லாஹ் நமக்கு தவ்ஃபீக் வழங்குவானாக. சமுதாயத்தின் இந்த பலவீனமானவர்களுக்கு நம்மால் முடிந்த வரை நமது கடமையை செய்வோமாக. அல்லாஹ்வின் உதவியை பெறுவோமாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON,**

**ON 26.02.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**